தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை பாலர்வகுப்பு கீழ்ப்பிரிவு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி.ப.இராமகிருஷ்ணசுவாமி திகதி:- 29-11-2008

வினா 1: உங்கள் பெயரை எழுதுங்கள்.

பெயர்:

(11 புள்ளிகள்)

வினா 2:
ஒழுங்கின்படி விடுபட்ட எழுத்தை உரிய இடத்தில் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | ஆ | | |
| உ | ஊ | | ஏ |
| ஐ | ஒ | | |
| ஃ | | | |

(18 புள்ளிகள்)

வினா 3: சொல்வதை எழுதுங்கள்

1. ______________________ 2. ______________________

(16 புள்ளிகள்)

வினா 4: பார்த்து எழுதுங்கள்

# ச ங் கு   க ப் ப ல்

______________________ ______________________

(7 புள்ளிகள்)



வினா 5:

புள்ளிகளை எண்ணிச் சொல்லுடன் இணையுங்கள்

| | |
|---|---|
| ● ● ● ● ● ● ● ● ● ● | இரண்டு |
| ● ● | பத்து |
| ● ● ● ● | ஆறு |
| ● ● ● ● ● ● | ஒன்று |
| ● ● ● | நான்கு |
| ● | மூன்று |

(24 புள்ளிகள்)

வினா 6: படத்திற்குரிய சொல்லுடன் இணையுங்கள்

| | |
|---|---|
|  | உஞ்சல் |
|  | மாடு |
|  | கோழி |
|  | கிளி |
|  | ஆடு |
|  | அம்மா |

(24 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை பாலர்வகுப்பு மேற்பிரிவு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்கள்: திருமதி க.வடிவேற்பிள்ளை திகதி:- 29-11-2008
திருமதி ச.பாலகங்காதரன்

வினா 1: உங்கள் பெயரை எழுதுங்கள்

______________________________________________

(5 புள்ளிகள்)

வினா 2: எழுத்துக்களை ஒழுங்குமுறைப்படி எழுதுங்கள்.

1. க கி கு கா கீ கெ கூ கே

______________________________________________.

2. பு பி பூ பெ ப பே பா பீ


______________________________________________.

3. வ வு வெ வூ வா வி வே வீ

______________________________________________.

(15 புள்ளிகள்)

வினா 3: வடிவங்களை உரிய சொல்லுடன் இணையுங்கள்



நீள்சதுரம் முக்கோணம் சதுரம் வட்டம்

(10 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

வினா 4: படத்தை வரிசைப்படுத்தி (1,2,3,4,5,6,7,8) என்ற எண்களை உரிய படத்தில் எழுதுங்கள்.












(20 புள்ளிகள்)

வினா 5: படத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| வீடு | மீன் | முயல் | மயில் | சேவல் |

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

(20 புள்ளிகள்)

வினா 6: படத்திற்கு ஏற்ற நிறம் தீட்டுங்கள்




கத்தரிக்காய்




ஆப்பிள் பழம்



வெண்டிக்காய்



மிளகாய்



எலுமிச்சம்பழம்

(15 புள்ளிகள்)

வினா 7: இடைவெளிகளை நிரப்புங்கள்.

| |
|---|
| வா______து (த் , த) |
| குர______கு (ங் , ங) |
| க_____டில் (ட , ட்) |
| மணி______கூடு (க , க்) |
| பொ______மை (ம , ம்) |

(15 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு ஒன்று நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி க.வனதேவா திகதி:- 29-11-2008
பெயர்:-

வினா 1: கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதவும்.



புளிக்கும், மரம், சாப்பிட்டால், காய்களும் , பழுத்த

இது ஒரு ______________. இது ஒரு மா மரம்.

இதில் ____________________, பழங்களும் உள்ளன.

பச்சை மாங்காய் சாப்பிட்டால் __________________.

சில _______________________ பழங்களும் உள்ளன.

இவற்றைச் _______________________ இனிக்கும்.

(15 புள்ளிகள்)

வினா 2: வசனமாக ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. காட்டு / கரடி / மிருகம்

…………………………………………………………………….

2. நான் / உண்பேன் / விரும்பி / பழங்களை

…………………………………………………………………….

3. நிறம் / வெள்ளை / பால்

……………………………………………………………………..

4. வெப்பம் / தருகிறது / சூரியன்

………………………………………………………………………

5. ஆடியது / மரம் / காற்றில்

………………………………………………………………………

(15 புள்ளிகள்)

வினா 3: பொருத்தமான சொல்லை இணைக்க

| | |
|---|---|
| இனிக்கும் | தேசிக்காய் |
| புளிக்கும் | பலாப்பழம் |
| உறைக்கும் | பாகற்காய் |
| கசக்கும் | உப்பு |
| உவர்க்கும் | மிளகு |

(15 புள்ளிகள்)

வினா 4: எதிர்ச் சொற்களை இணைக்க

| | |
|---|---|
| மேற்கு | உதிக்கும் |
| மறையும் | கிழக்கு |
| மாலை | இருட்டு |
| கறுப்பு | காலை |
| வெளிச்சம் | வெள்ளை |

(15 புள்ளிகள்)

வினா 5: படங்களுடன் தொடர்பு படுத்துக.



கரண்டி





தொலைக்காட்சி



அலுமாரி



மணிக்கூடு



வானொலி

(15 புள்ளிகள்)

வினா 6: சொற்களைத் தேடிக் கண்டு பிடியுங்கள்

| | | | |
|---|---|---|---|
| அ | ம் | மா | ப |
| ப் | மா | மி | க |
| பா | ட் | டி | ல் |

1. ____________ உணவு ஊட்டினார்.

2. அவன் _______ எறிந்தான்.


3. ____________ கதை சொன்னார்.

4. ____________ நேரம் வெளிச்சமாக இருக்கும்.

5. ____________ பரிசு தந்தார்.

(15 புள்ளிகள்)

வினா 7: உமது செல்லப் பிராணியைப் பற்றி 3 வசனம் எழுதுக.







1) ______________________________

______________________________

2) ______________________________

______________________________

3) ______________________________

______________________________

(10 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

---

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு இரண்டு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி நி.தயாளன் திகதி:- 29-11-2008

பெயர்:

---

வினா 1: கீழே வரும் கதையை வாசித்து கோடிட்ட இடங்களை நிரப்புக.

**மந்திரக் குளம்**

ஒரு வேடன் காட்டுக்குப் போனான். அப்போது ஒரு பூச்சி அவன் காலைக் கடித்தது. அவன் கால் வீங்கியது. வேடன் வலி தாங்க முடியாமல் துடித்தான். வேடனுக்குத் தாகமாக இருந்தது. அவன் குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தான். உடனே அவன் காலில் இருந்த வீக்கம் மறைந்தது. கால் வலியும் நின்றுவிட்டது. வேடன் அந்தக்



குளத்தை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

i. வேடனை ஒரு .......................................... கடித்தது.

i. அவனுடைய கால் .........................................

ii. அவன் தண்ணீர் குடிக்க .............................................. இறங்கினான்.

iii. ....................................... குடித்ததும் அவனுடைய கால் வலி நின்று விட்டது.

iv. வேடன் மந்திரக் குளத்தை ..................................................... பார்த்தான்.

(10 புள்ளிகள்)

வினா 2: பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.

i. சாப்பிட்டோம் / பழங்களைச் / சில

...........................................................................................................................

ii. வாத்தியார் / ஒரு / என் / அப்பா

...........................................................................................................................

iii. இல்லை / பழம் / வீட்டில்

...........................................................................................................................

iv. அம்மா / என்றார் / பழம் / வாங்கி / வருகிறாயா?

...........................................................................................................................

v. தம்பிக்கு / கொடுத்தேன் / நான் / இனிப்புக்

...........................................................................................................................

vi. என்றான் / வேண்டும் / பழம் / கண்ணன்

...........................................................................................................................

vii. போனேன் / கடைக்குப் / நான்

...........................................................................................................................

viii. பட்டது / மீது / தம்பி / பந்து

...........................................................................................................................

ix. எறிந்தேன் / பந்தை / நான்

...........................................................................................................................

x. புத்தகம் / இருந்தான் / கண்ணன் / படித்துக் / கொண்டு / கதை

...........................................................................................................................

(20 புள்ளிகள்)

வினா 3: பொருத்தமான சொற்களைச் சோடி சேர்க்க.

| | |
|---|---|
| அவர் | குடி |
| நான் | நீங்கள் |
| நீ | அவர்கள் |
| தம்பி பால் | ஓடினான் |
| அவன் | நாங்கள் |

(5 புள்ளிகள்)

வினா 4: சரியான எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

தோல்வி இறங்கு வெளிச்சம்

மூடு தீமை

| | |
|---|---|
| திற | |
| வெற்றி | |
| நன்மை | |
| ஏறு | |
| இருட்டு | |

(5 புள்ளிகள்)

வினா 5: பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புங்கள்.

பூக்கள் நான்கு கம்பளி மரங்கள் வெய்யில்

i. பருவகாலங்கள் ...................................... உள்ளன.

ii. வசந்தகாலத்தில் ........................................... பூக்கும்.

iii. இலையுதிர்காலத்தில் ............................................. இலைகளை உதிர்க்கும்.

iv. குளிர்காலத்தில் ............................................. உடைகளை அணிவோம்.

v. கோடைகாலத்தில் ............................................ அதிகமாயிருக்கும்.

(10 புள்ளிகள்)

வினா 6: சரியான சுவைகளை எழுதுக.

உறைக்கும் புளிப்பு இனிக்கும் உவர்ப்பு கசக்கும்

i. மிளகாய் சாப்பிட்டால் ......................................

ii. உப்பு ........................................... சுவையானது.


iii. பாகற்காய் சாப்பிட்டால் ..............................................

iv. மாம்பழம் ...............................................

v. புளியம்பழம் ............................................ சுவையுடையது.

(10 புள்ளிகள்)

வினா 7: சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.




i. ..................................................................

ii. ..................................................................

iii. ..................................................................

iv. ..................................................................

v. ..................................................................

(10 புள்ளிகள்)

வினா 8: பின்வரும் சொற்களைப் பொருத்தமான படங்களின் கீழ் எழுதுக.

முயல், பூனை, தாஜ்மகால், சிங்கம், குதிரைகள்,

டார்லிங் துறைமுகம், ஒபரா கவுஸ்





............................................................ ..............................................





............................................................ ..................................................................



………………………………………………………

தரப்பட்டுள்ள படங்களுள் ஏதாவது மூன்றைப்பற்றி ஒவ்வொரு வசனம் எழுதுக.

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

(20 புள்ளிகள்)

வினா 9: பின்வருவன ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு வசனம் எழுதுக.

1.ஒலிம்பிக் அல்லது பராஒலிம்பிக் விளையாட்டு

2.மரக்கறி அல்லது பழம்

3.தீபாவளி தினக் கொண்டாட்டம்

4.பாடசாலையில் உள்ள பொருள்

5.செல்லப்பிராணி

(10 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு மூன்று நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி செ.ஜெயமனோகர் திகதி:- 29-11-2008

பெயர்:-

1. கீழே வரும் கதையை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். இருவரும் வெளியூர் செல்ல வேண்டி இருந்ததனால் காட்டுப்பாதை வழியாக நடந்து சென்றனர். திடீரென்று அவர்கள் எதிரில் கரடி ஒன்று வந்து நின்றது. அவர்களில் ஒருவன் மரத்தில் ஏறி விட்டான். மற்றவனுக்கோ மரம் ஏறத் தெரியாது. அவன் எப்படித் தப்பிப்பதெனத் திகைத்தான். “ செத்தவர்களைக் கரடி ஒன்றும் செய்யாது” என்று ஆசிரியர் முன்பு சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அவன் உடனே தரையில் படுத்து மூச்சை அடக்கிக் கொண்டான். கரடி அவன் அருகே வந்து அவனை முகர்ந்து முகர்ந்து பார்த்தது. அவனோ மூச்சை அடக்கிக் கொண்டு செத்தவன் போலக்கிடந்தான். கரடி அவன் செத்து விட்டான் என நினைத்துக் கொண்டு போய்விட்டது.

மரத்தில் இருந்தவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு ஆபத்து இல்லை என்றவுடன் கீழே இறங்கினான். இறங்கியவுடன் தன் நண்பனைப் பார்த்துக் “ கரடி உனக்கு என்ன கூறியது? ” என்று கேட்டான். “ஆபத்துக் காலத்தில் உதவாத நண்பனை எப்போதும் நம்பாதே” என்றான் நண்பன். இதைக்கேட்ட நண்பன் தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்தான்.

i. இரண்டு நண்பர்களும் எப்படி வெளியூர் சென்றனர்?

______________________________

ii. அவர்கள் முன்னே வந்து நின்ற மிருகம் எது?

______________________________

iii. செத்தவனைப் போல கிடந்தவனுக்கு நினைவில் வந்த ஆசிரியர் கூற்று என்ன?

______________________________

iv. மரத்தில் இருந்தவன் எப்போது கீழே இறங்கினான்?

____________________________________________

v. இக்கதையில் இருந்து நீர் அறிவது என்ன?

____________________________________________

(20 புள்ளிகள்)

2. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தை நிரப்புக.

i. நீங்கள் ____________________ தேடுகிறீர்கள்?
(யார், எது, இவரைத், யாரைத்)

ii. சென்ற மாதம் வாணிவிழா ______________________________.
(நடக்கிறது, நடக்கப்போகிறது, நடந்தது, நடக்கும்)

iii. நாங்கள் தமிழில் கடிதம் ______________________________.
(எழுதினேன், எழுதினார்கள், எழுதினாள், எழுதுவோம்)

iv. இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை ______________________________.
(எழுதுவார், எழுதினார், எழுதுகிறார்)

v. நாங்கள் அடுத்த வருடம் 4ம் வகுப்பிற்கு ______________________________.
(செல்வோம், சென்றோம், சென்று விட்டோம், சென்று கொண்டு இருக்கிறோம்)

(5 புள்ளிகள்)

3. பின்வருவனபற்றி இருவசனங்கள் எழுதுக.

i. தமிழர் பண்டிகைகள்

ii. திருவள்ளுவர்

iii. சிலப்பதிகாரம்

iv. பாரதியார்

v. கலைவிழா

(20 புள்ளிகள்)

4. சரியான சொற்களை இணைத்துக் காட்டுக.

| | |
|---|---|
| கவிஞர் | போர்த்தேங்காய் அடி, கிளித்தட்டு, மாட்டு வண்டிச் சவாரி |
| தொலைபேசி | ஆதிபகவன் முதற்றே உலகு |
| தமிழர் விளையாட்டுக்கள் | பதில் சொல்லும் பொறி |
| ஆகர முதல எழுத்தெல்லாம் | பாராட்டு விழா |
| ஒருவரைப் பாராட்டி நடைபெறும் விழா | கவிதைகள் எழுதுபவர் |

(10 புள்ளிகள்)

5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. தமிழ் மொழி வாழ்த்தைப் பாடியவர் யார்?

________________________________________

ii. எனது அம்மாவின் தம்பியின் மனைவி எனக்கு என்ன முறை?

________________________________________

iii. சிலப்பதிகாரத்தின் கதாநாயகி பெயர் என்ன?

________________________________

iv. பொருட்கள் வாங்கி விற்பவர் யார்?

________________________

v. உமது தந்தையின் பெயரை எழுதுக.

________________________

(10 புள்ளிகள்)

6. சொற்களைக் கண்டு பிடிக்கவும்.

i. சிலப்பதிகாரம் ____________________

ii. விலங்குத்தோட்டம் ____________________

iii. போர்த்தேங்காய் ____________________

iv. கூடைப்பந்து ____________________

v. வண்டிச்சவாரி ____________________

(15 புள்ளிகள்)

7. சேர்த்து எழுதுக

i. தமிழ் அறிவு ____________________

ii. வாய் பாட்டு ____________________

iii. பள்ளி கூடம் ____________________

iv. கலை விழா ____________________

v. வனம் விலங்கு ____________________

பிரித்து எழுதுக

i. கருநிறம் ____________________

ii. விலங்குத்தோட்டம் ____________________

iii. புல்வெளி ____________________

iv. வாழைப்பழம் ____________________

v. நாட்டுப்பற்று ____________________

(10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி ஐந்துக்கு மேற்பட்ட வசனங்கள் எழுதவும்.

i. நானும் எனது குடும்பமும்
ii. எனது பாடசாலை
iii. அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள்

(10 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

---

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு ஆறு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திரு ச.தேவராசா திகதி:- 29-11-2008

**பெயர்:-**

---

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

1. கீழே உள்ள சொற்களைப் பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புக

**குறிஞ்சிப்பூ, நோயாளிகளை, படைத்தான், பழங்கள், நறுமணம், கார்த்திகைப்பூ, கவர்கின்றன, பூக்கள், தாமரை, நீர்வீழ்ச்சிகள்**

இறைவன் இயற்கையை முதலில் __________________________. மலைகள், காடுகள், நதிகள் __________________ போன்றன இயற்கையின் கூறுகளாகும். பசுமையான மரங்கள், அம்மரங்களில் பூக்கும் அழகான ___________________________________ அந்த மரங்கள் மக்களுக்காக வழங்கும் இனிமையான ____________________________ எல்லாம் வியப்புக்குரியவை.

பொதுவாக எல்லா மக்களும் மலர்களை விரும்புவார்கள். அவற்றின் நிறங்கள், அந்த மலர்கள் வெளிப்படுத்தும் ________________________ என்பன மக்களின் மனதைக் ________________________. மல்லிகை, றோசா, செவ்வந்தி, சூரியகாந்தி போன்றன செடிகளில் பூக்கின்றன. அல்லி, செங்கழுநீர், ________________________ போன்றன நீர்த்தடாகங்களில் பூக்கின்றன. கார்த்திகை மாதத்தில் அதிகமாகப் பூக்கும் ________________________, பன்னிரெண்டு வருடங்களுக்கொருமுறை பூக்கும் ________________________, நாங்கள் எதை நினைத்துக்கொண்டு மணக்கின்றோமோ அந்த வாசனையைத் தருகின்ற மனோரஞ்சிதப்பூ போன்ற பல விந்தையான பூக்களை நாங்கள் காணலாம். பூக்களின் பயன்பாடு மிக அதிகம். மாலை கட்டவும், இறைவனைப் பூசிக்கவும், பெண்கள் தலையில் சூடவும் பூக்கள் பயன்படுகின்றன. அவுஸ்திரேலியா

போன்ற நாடுகளில் ______________________ பார்க்க வைத்திய சாலைக்குச் செல்லும் போது பூக்களை கொண்டு செல்கிறார்கள்.

(?? புள்ளிகள்)

2. பின்வரும் பந்திகளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் பெருமளவில் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளார்கள். இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக இலட்சக்கணக்கான தமிழர்கள் தமது நாட்டை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். உயர்கல்வியைப் பெறுவதற்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் இந்தியாவிலிருந்து பெருமளவு தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

துமிழ் மக்கள் அவர்கள் தொன்று தொட்டு வாழ்ந்த இலங்கை, இந்தியா, போன்ற நாடுகளில் தனித்துவமான பண்பாட்டுடன் வாழ்ந்தவர்கள். ஒருவனின் உணவு, உடை, பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பண்பாடு என்று கூறலாம். அந்தப் பண்பாட்டில் பெரியவர்களை மதித்தல், ஒழுக்கத்துடன் வாழ்தல் போன்ற அம்சங்கள் பெரிதும் வலியுறுத்தப்பட்டன.

“ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்பது திருக்குறள். அதாவது ஒழுக்கம் உயர்வைத் தருவதனால் அது உயிரைவிட மேலாக மதிக்கப்படும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இவ்வாறு தமிழ் மக்களும், அவர்களுடைய பிள்ளைகளும் ஒழுக்கத்துடன் வாழ்வதற்கேற்ற வகையில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அவர்கள் வாழ்ந்த சூழல் அமைந்திருந்தது. ஆனால் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அப்படியான சூழல் இல்லை. வேவ்வேறு வகையான பண்பாடுகளைக் கொண்டவர்கள் மத்தியில் நாம் வாழ்கின்றோம். அதற்காக நாம் எங்களுடைய பண்பாட்டை மறந்து மற்றவர்களுடைய பண்பாட்டைத் தத்து எடுத்து விடக்கூடாது. அவுஸ்திரேலியாவில் உயர்கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் நல்ல சந்தர்ப்பங்கள் எமது பிள்ளைகளுக்கு உள்ள வேளையில் மது அருந்துதல், புகைபிடித்தல், போதைவஸ்து பாவனை, சூதாடுதல் போன்ற கெட்ட வழிகளில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. அன்னப்பறவையிடம் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் அது பாலை மட்டும் அருந்திவிட்டு தண்ணீரை விட்டுவிடுமாம். அதே போல அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழ்ப்பிள்ளைகள் இங்குள்ள நல்லவற்றை எடுத்துக்கொண்டு தீயவற்றை ஒதுக்கிவிடவேண்டும். அவ்வாறு அவர்கள் செய்தால் நிச்சயமாக அவர்களின் வாழ்க்கை ஒளிமயமானதாக இருக்கும்.

A. எந்த நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தார்கள்?

______________________________________________

B. தமிழர்கள் இடம் பெயர்ந்த நான்கு நாடுகளை எழுதுக.

C. இலங்கைத் தமிழர் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தமைக்கான முக்கிய காரணம் என்ன?

D. இந்தியாவில் வாழ்ந்த தமிழர்கள் எதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள்?

E. பண்பாடு என்றால் என்ன?

F. தமிழ்ப்பண்பாட்டில் வலியுறுத்தப்பட்ட அம்சங்கள் எவை?

G. ஒழுக்கம் ஏன் உயிரைவிட மேலாக மதிக்கப்படுகிறது என்று வள்ளுவர் கூறுகிறார்?

H. அவுஸ்திரேலியாவில் காணப்படும் கெட்ட பழக்கங்கள் எவை?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

I. அன்னப்பறவையின் குணம் என்ன?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

J. அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழ்ப்பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

(?? புள்ளிகள்)

3. பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| சிரித்தான் | | |
| | பாடுகிறான் | |
| | | ஓடும் |
| விழுந்தார்கள் | | |
| | நடிக்கின்றான் | |
| | | வருவாள் |
| கூவியது | | |
| | பாய்கின்றது | |
| | | அழுவார்கள் |
| படித்தான் | | |

(?? புள்ளிகள்)

4. இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள உங்கள் உறவினருக்கு எதிர்வரும் கோடை விடுமுறையில் அங்கே வருவதாகவும், அங்கே உள்ள சிறப்பு மிக்க இடங்களுக்குக் கூட்டிச் செல்லுமாறும் எண்பது சொற்களுக்குக் குறையாமல ஒரு கடிதம் எழுதுக.

(?? புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 15 வசனங்கள் எழுதுக.

A. கோடை காலம்

B. பருவகாலங்கள்

(20 ள்ளிகள்)

தேவைப்பட்டால் உபயோகிக்க மேலதிக கோடுகள்

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு ஏழு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி சா.விஜயநாதன் திகதி:- 29-11-2008

பெயர்:- ______________________________________________.

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழே கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

பண்டைக் காலத்தில் தமிழ்நாடு மூன்று பிரிவுகளாக இருந்தது. மூன்று பிரிவுகளையும் பாண்டியர், சேரர், சோழர் ஆகிய மூவேந்தர் ஆண்டு வந்தனர். மூவேந்தருள் பாண்டியர் மிகவும் பழமை வாய்ந்தவர். "பண்டையர்" எனும் சொல்லின் திரிபே "பாண்டியர்" ஆயிற்று. மதுரையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியும் பாண்டிய நாடாகத் திகழ்ந்தது. பாண்டிய மன்னருள் நெடுஞ்செழியன், கூன்பாண்டியன், விக்கிரம பாண்டியன் ஆகியோர் புகழ் பெற்றவராவர்.

பாண்டியரின் கொடியில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது. அவர்களின் அடையாள மாலை வேப்பம் பூவால் தொடுக்கப்பட்டதாகும். பாண்டிய மன்னர்கள் சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்த்தனர். அயல் நாடுகளுடன் வாணிபம் நடத்தினர். பொன்னாலும் செம்பாலும் செய்யப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர்.

இன்றைய கேரள நாட்டின் பெரும்பகுதி அன்றைய சேர நாடாகத் திகழ்ந்தது. சேர நாட்டை ஆண்ட மன்னர் சேரர் ஆவர். சேர நாட்டின் தலைநகரம் வஞ்சி. சேரமன்னருள் இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் ஆகியோர் புகழ்பெற்றவராவர். செங்குட்டுவன் தம்பியே சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் ஆவர். சேரமன்னர் கொடியில் வில் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அடையாள மாலை பனம் பூவாலானது.

தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சி ஆகிய நகர்களைச் சுற்றியுள்ளபகுதி சோழ நாடாகத் திகழ்ந்தது. இப்பகுதியை ஆண்ட மன்னர் சோழர் ஆவர். சோழ மன்னருள் இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் ஆகியோர் புகழ் பெற்றவராவர். சோழ மன்னர் கொடியில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். அவர்கள் அடையாள மாலை ஆத்தி மலர்களால் தொடுக்கப்பட்டதாகும். சோழர்கள் தஞ்சையிலுள்ள பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம் முதலிய கோயில்களைக் கட்டினர்.

மூவேந்தர்களும் மொழிப்பற்று மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர். மன்னருள் சிலர் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். பலர் பாடல்களைப் பாடியுள்ளனர். மன்னர்கள் தமிழ்ப்புலவர்களைப் போற்றினர். அவர்கட்குப் பொன்னும் மணியும் பரிசாக அளித்தனர். புலவர்கள் கூறும் நல்வழிகளைப் பின்பற்றினர். தம் அரசவையில் அமர்த்தி அவர்களைப் பெருமைப்படுத்தினர். மூவேந்தர்களும் நீதி தவறாமல் நாட்டை ஆண்டு வந்தனர். தம்மாலும் பிறராலும் மக்கள் வருந்தாமல் அவர்களைக் காத்தனர். மாறுவேடம் பூண்டு நாட்டைச் சுற்றி வந்து, மக்கள் குறை அறிந்து அவற்றைப் போக்கினர். மூவேந்தர் காலத்தில் நாடு செழிப்பாக இருந்தது. மக்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். மூவேந்தர் நாட்டை ஆண்ட காலம் பொற்காலம். தமிழ் மொழியும், தமிழ் கலைகளும் சிறந்து வளர்ந்தன.

i. மூவேந்தர் என்பது யாரைக் குறிக்கும்?

…………………………………………………………………………………….

ii. பாண்டிய நாடாகத் திகழ்ந்த பகுதிகள் யாவை?

……………………………………………………………………………………..

iii. சோழமன்னர் கட்டிய கோயில்கள் எவை?

……………………………………………………………………………………..

iv. சேர மன்னரின் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னம் எது?

……………………………………………………………………………………..

v. பாண்டியரின் அடையாள மாலையின் பூ எது?

……………………………………………………………………………

vi. பெருவுடையார் கோயிலைக் கட்டியவர் யார் ?

………………………………………………………………………………………

vii. மூவேந்தரும் நாட்டை எவ்வாறு ஆண்டனர்?

………………………………………………………………………………………

viii. சோழ மன்னரின் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னம் எது?

………………………………………………………………………………………

ix. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

………………………………………………………………………………………

x. சோழ மன்னரின் அடையாள மாலையின் பூ எது?

………………………………………………………………………………………

(30 புள்ளிகள்)

**2.** **கீழே உள்ள சொற்ளுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**வேகமாக, குதித்துக்குதித்து, பணிவாக, மெதுவாக, மகிழ்ச்சியாக**

i. தேர்வில் வெற்றி பெற்றதால் அகிலன் ............................ இருந்தான்.

ii. அடுத்தவருக்குக் கேட்காதபடி கண்ணன் காதுக்குள்ளே ...................... பேசினான்.

iii. முயல் .......................................... போகும் போது அழகாக இருக்கும்.

iv. பெரியோரை மதித்துப் .................................... நடக்க வேண்டும்.

v. யானை நோயுற்று இருந்ததால் அதனால் ......................... நடக்க முடியவில்லை.

(10 புள்ளிகள்)

**3.** **சேர்த்து எழுதுக**

i. நூல்கள் + படித்தனர் - ...............................................

ii. கோயில் + கட்டினர் - ..............................................

iii. வாழை + இலை - ...................................................

iv. காலை + உணவு - ....................................................

v. கடல் + ஓரம் - .........................................................

(10 புள்ளிகள்)

4. **பின்வரும் சொற்களை இரு வேறு பொருள் விளங்குமாறு வசனம் எழுதுக.**

(அ) ஓடு –

i. .........................................................................

ii. .........................................................................

(ஆ) ஆடி –

i. .........................................................................

ii. .........................................................................

(இ) நகை –

i. ……………………………………………………………………

ii. ……………………………………………………………………

(ஈ) நிறை -

i. ……………………………………………………………………

ii. ……………………………………………………………………

(உ) ஆறு –

i. ……………………………………………………………………

ii. ……………………………………………………………………

(20 புள்ளிகள்)

**5.** **பின்வரும் கெரற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக**

**இளம், சேர்ந்தார், இருபதாம், வாழ்நாள், ஊரில், தந்தையர், தொண்டு, ஆகும், விபுலானந்தர், சமயத்திற்கும், அதிபராக, வடமொழி, பின்னர், ஆர்வம்**

விபுலானந்தர் மட்டக்களப்பிலே காரைதீவு என்னும் __________________ பிறந்தார். இவருக்கு தாய் __________________ வைத்த பெயர் மயில்வாகனன் _______________. இவர் __________________ வயதிலேயே கல்வியில் மிகுந்த __________________ உடையவராக இருந்தார். தமிழ், __________________, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். தமது __________________ வயதில் அவர் ஆசிரியரானார். __________________ மானிப்பாய் இந்துக் கல்லூரியில் __________________ சேவை புரிந்தார். அவர் தமது __________________ முழுவதும் இந்து, __________________, தமிழ் மொழிக்கும் __________________ செய்ய விரும்பி இராமகிருஷ்ண சபையில் __________________ . இவ்வாறாக அவர் துறவியாகி __________________ என்னும் பெயரைப் பெற்றார்.

(14 புள்ளிகள்)

6. **பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.**

i. நீர் கொண்டாடும் பண்டிகைகளுள் ஒன்று
ii. புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் எமது கலாசாரம் பேணப்படுகிறது

(16 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

**P.O.Box 4019, Homebush NSW 2140**

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு எட்டு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி ர.குலராஜா திகதி:- 29-11-2008

பெயர்:- ______________________________________________.

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு பூரணமான பதிலளிக்கவும்.**

பறவைப் பூங்காவில் பெங்குயின் பறவையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது தள்ளாடித் தள்ளாடி நடப்பதைக்காணும் போது நமக்கு வேடிக்கையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்ஆபிரிக்கா, தென்அமெரிக்கா போன்ற பகுதிகளில் பென்குயின் பறவையை அதிகம் காணலாம். பெரும்பாலும் அவற்றின் முதுகுப்புறம் கறுப்பாகவும், அடிப்பாகம் வெள்ளையாகவும் காணப்படும். அது மீன்களையும் மற்றக் கடல்வாழ் பிராணிகளையும் விரும்பித் தின்னும்.

கீவி, நெருப்புக்கோழி முதலிய பறவைகளைப்போவே பெங்குயின்களாலும் பறக்க முடியாது. அதன் உடல் பெரியதாகவும், இறக்கைகள் சிறியவையாகவும் இருப்பதாற்தான் அதனால் பறக்க முடிவதில்லை. எனினும் அது தன் இறக்கைகளைத் துடுப்புப்போல பயன்படுத்தித் தண்ணீரில் மிக வேகமாக நீந்தும் ஆற்றல் உடையது. அது தரையில் நடக்கும் போது தன் கால்களை ஊன்றி நிமிர்ந்து செல்கிறது. அது அவ்வாறு நடப்பதற்கு அதன் கால்கள் உடலின் பிற்பகுதியில் அமைந்திருப்பதே காரணம்.

பெங்குயின் பறவைகளில் பலவகை உண்டு. அவற்றுள் அரசபெங்குயின் தான் உருவத்திற் பெரியது. அது ஒரு சமயத்தில் ஒரு முட்டை தான் இடும். மற்றவகைப் பெங்குயின்கள் சிறியவை. அவை நீல நிறமுடையவை. அரச பெங்குயினைப்போல அல்லாமல் அவை ஒன்றுக்கு மேற்பட்ட முட்டைகள் இடுவது வழக்கம்.

பெங்குயின்கள் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை உயிர்வாழக்கூடியவை. அவற்றுடன் பழகுவது எளிது. அவை வளர்ப்பவரிடம் அன்பாக நடந்துகொள்ளும்.

i. பெங்குயின் பறவையின் முக்கிய உணவு என்ன?

______________________________________________

ii. எந்த நாடுகளில் பெங்குயின் பறவை அதிகம் காணப்படுகிறது?

---

iii. பெங்குயின் பறவை பறக்க முடியாமைக்குரிய காரணம் என்ன?

---

iv. அதனிடம் உள்ள ஆற்றல் என்ன?

---

v. பெங்குயின் கால் ஊன்றி நிமிர்ந்து நடக்கக் காரணம் என்ன?

---

vi. பெங்குயின் பறவைகள் எத்தனை ஆண்டுகள் உயிர்வாழும்?

---

vii. பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுக.

மகிழ்ச்சியாக ..............................................

ஆற்றல் ..............................................

எளிது ..............................................

இறக்கைகள் ..............................................

தரையில் ..............................................

உருவத்தில் ..............................................

நிறமுடையது ..............................................

ஆண்டுகள் ..............................................

அன்பாக ..............................................

வேகமாக ..............................................

(22 புள்ளிகள்)

2. “அ” பகுதியில் உள்ள சொற்களுக்கேற்ற முடிக்கும் சொற்களை ”ஆ” பகுதியில் இருந்து தெரிவு செய்து இணைத்துக்காட்டுக.

| அ | ஆ |
|---|---|
| i. நூல் | சஞ்சிகை |
| ii. பாடசாலை | பிரதி |
| iii. மாதாந்தச் | போட்டி |
| iv. வாரப் | வெளியீடு |
| v. கையெழுத்துப் | நிகழ்ச்சி |
| vi. புத்தகக் | தொடங்கியது |
| vii. சூரிய | விழா |
| viii. பொங்கல் | பத்திரிகை |
| ix. தொலைக்காட்சி | உதயம் |
| x. தமிழ் அறிவுப் | கண்காட்சி |

(10 புள்ளிகள்)

3. கீழ்வரும் பழமொழிகளை கருத்து விளங்க இணைத்துக் காட்டுக.

| | |
|---|---|
| i. மின்னுவதெல்லாம் பொன்னல்ல | பிறரை நம்பி வாழாதே |
| ii. மனங்கொண்டதே மாளிகை | படித்ததை மற்றவர்களுக்கும் கொடுக்கக் கொடுக்க அறிவு பெருகும் |
| iii. தன்கையே தனக்குதவி | எச்செயலையும் ஆராய்ந்து செய்தல் நன்று |
| iv. ஆழம் அறியாமல் காலை விடாதே | கிடைப்பதுடன் மனநிறைவாக வாழல் |
| v. கிணறு இறைக்க இறைக்க சுரக்கும் | கவர்ச்சியானவை எல்லாம் நல்லதல்ல |

(10 புள்ளிகள்)

4. பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.

i. உச்சி குளிர்ந்தேன் ..........................................................................................................

..........................................................................................................

ii. இன்றியமையாத ..........................................................................................................

..........................................................................................................

iii. ஊக்கமூட்டினார் ..........................................................................................................

..........................................................................................................

iv. அஞ்சி நடுங்கினார் ..........................................................................................................

..........................................................................................................

v. உபசரித்தார் ..........................................................................................................

..........................................................................................................

(10 புள்ளிகள்)

3. கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வானொலியில் அறிவிப்பதற்கேற்ற பிறந்தநாள் வாழ்த்து 40 - 45 சொற்களுக்கு அமையத் தயாரிக்க.

பிறந்தநாள் கொண்டாடுபவர் - அருணன்
பெற்றோர் - திரு, திருமதி செல்வநாதன்
வயது - 12
கொண்டாடும் இடம் - அவரது இல்லம்
வாழ்த்துபவர்கள் - அம்மா, அப்பா, அக்கா, தம்பி, தாத்தா, பாட்டி, தமிழ்ப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்

உங்களுக்கு உதவக்கூடிய மேலதிக சொற்கள்:
பல்லாண்டுகாலம், சீரும் சிறப்புமாக, பல கலைகளும் கற்று

(12 புள்ளிகள்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை தெரிந்து இடைவெளியை நிரப்புக.

i. வாளியில் தண்ணீர் ................................ இருந்தது. (நிரைந்து, நிறைந்து)

ii. பாம்பைக் கண்ட சிறுவன் ..................தெறிக்க ஓடினான். (தலை, தழை)

iii. கரும்பை சிறு சிறு துண்டுகளாக ........................ உண்டேன். (நறுக்கி, நருக்கி)

iv. அம்மா எனது பந்தை ........................... வைத்துவிட்டார். (ஒழித்து, ஒளித்து)

v. மல்லிகைப்பூ நல்ல ................................ தரும். (மனம், மணம்)

vi. மாணவர்கள் கடற்.................யில் விளையாடினார்கள். (கரை, கறை)

vii. புயலில் சிக்கிய கப்பல் ................... ஒன்றில் மோதியது. (பாரைஇ பாறை)

viii. ........................... பழம் முக்கனிகளில் ஒன்று. (வாளை, வாழை)

ix. காலையில் .................... வணக்கம் செய்தல் நன்று. (இரை, இறை)

x. சத்துள்ள உணவுகளை ................ வேண்டும். (உண்ண, உன்ன)

(10 புள்ளிகள்)

6. பின்வரும் கதையை உமது கற்பனையுடன் எழுதிமுடிப்பதற்கு குறைந்தது 50 சொற்களைப் பயன்படுத்துக.

கண்ணன் பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான். சாலையோரத்தில் வயோதிபர் ஒருவர் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார். சற்று நேரம் கண்ணன் அவ்விடத்தில் நின்றான். ஒருவரும் முதியவரைக் கவனிக்கவில்லை. கண்ணன் மனம் முதியவருக்கு உதவி செய்ய விரும்பியது. அருகில் சென்று முதியவரைத் தூக்கினான். முதியவரின் கால்களிலிருந்து இரத்தம் வடிந்தது. வாகனம் மோதிவிட்டுச் சென்றுள்ளது என்வதைக் கண்ணன் உணர்ந்தான். உடனே ................................ (12 புள்ளிகள்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................
.
..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

9. பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுங்கள்.

1. அவுஸ்திரேலியாவில் உல்லாசப்பயணம்.

2. புலம் பெயர்ந்த நாடுகளில் எவ்வாறு தமிழர் பண்பாடு வளர்கிறது.

3. நீர் கற்கும் தமிழ்ப்பாடசாலை நிர்வாகத்திலும் கல்வியிலும் மேலும் முன்னேற உமது கருத்துக்கள்.

4. ஒரு தமிழ்ப் பெரியார்

5. பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கல்விகற்கும் நீர் கல்விச்சுற்றுலா செல்வதற்கு உமது தந்தையின் அனுமதியும், பணமும் வேண்டி எழுதும் கடிதம்.

(14 புள்ளிகள்)

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

.....................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

.....................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

.....................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு ஒன்பது நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி பு. புருஷோத்தமர் திகதி:- 29-11-2008
பரீட்சை தாள் தயாரித்தவர்: திருமதி. கே. பாலசுப்ரமணியன்.
**பெயர்:-**

வாசித்து விடையளித்தல்

1. பின்வரும் சொற்களைக் கொண்டு அதன் கீழ் தரப்பட்ட உரைப்பகுதியில் காணப்படும் கீறிட்ட இடங்களை உரிய முறையில் பூரணப்படுத்துக.

விஞ்ஞானி, சாதனம், தெரிந்து, ஓவியர், பொழுதுபோக்கு, ஏழை, அறிந்து, பெரியோர், முடுக்குகளிலும், அரிய, தகவல்களை, உலகில்

எனது பெயர் வானொலி (Radio). என்னை விரும்பாதவர்கள் இந்த .................. எவரும் இருக்கமுடியாது. இன்றைய நவீன யுகத்தில் என்னைவிட எளிதான பொழுதுபோக்குச் ............................ வேறெதுவும் இல்லை எனலாம்.

இத்தாலிய ............................................. மார்க்கோனி என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஓரிடத்தில் பேசுவதைப் பல மைல்களுக்கு அப்பால் எந்த விதமான கம்பித் தொடர்புமின்றிக் கேட்கமுடியும் என்று நீங்கள் கற்பனை செய்தும் இருக்கமாட்டீர்கள். ஆனால் இந்த ................................ சாதனையைச் செய்தவர்தான் மார்க்கோனி. அவரது இந்த அரிய சாதனையை உலக மக்கள் என்றுமே நன்றியுடன் போற்றுவார்கள்.

நான் உங்களுக்குப் பலவகையில் உதவுகின்றேன். நான் வெறும் பொழுது போக்குச் சாதனம் மட்டுமல்ல. உலகின் எந்த மூலை .................................................... நடைபெறும் சம்பவங்களையும் உடனுக்குடன் செய்திகளாக உங்களுக்குத் தெரிவித்திட யான் உதவுகின்றேன். .......................................... மக்களுக்குத் தெரிவிப்பதில் என் மூலமாகப் பெரும் புரட்சியே ஏற்பட்டிருக்கிறது என்றாலது மிகையல்ல. உலக மக்கள் எதனையும் ........................................ கொள்ள என்னையே நாடுகிறார்கள்.

நான் இல்லாத இல்லமே இல்லையெனச் சொல்லிவிடலாம். சிறுவர் முதல் ................................ வரை என்னைச் சுற்றி அமர்ந்து கொண்டு பாட்டுக் கேட்கிறார்கள். கதை, நாடகம் எல்லாம் கேட்கிறார்கள். ஏன்? வியாபாரிகள் கூடச் சந்தை நிலவரங்களைக்கூட என்மூலமே அறிந்து கொள்கிறார்கள். நான் வெறும் ..................................... சாதனமாக மட்டும் இருக்கவில்லை. மக்களிடையே கல்வி அறிவு பரப்பும் சாதனமாகவும் செயற்பட்டு வருகிறேன்.

ஒரு காலத்தில் நான் விலை உயர்ந்த பொருளாகக் கருதப்பட்டேன். செல்வந்தர்களின் ஆடம்பரப்பொருளாகவும் மதிக்கப்பட்டேன். இப்பொழுது .................... மக்களும் வாங்கக்கூடிய வகையில் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறேன். மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துவிட்டேன். என்றும் எப்போதும் எனது பயன்பாடு நலைபெற்றுவிட்டது.

(10 புள்ளிகள்)

2. தரப்பட்ட பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள அட்டவனையைப் பூர்த்தி செய்க.

### சேமிக்கவேண்டும் இப்படி!

வரிக்குதிரையின் குட்டி, பிறந்து ஒரு மணி நேரத்திலேயே தலைநிமிர்ந்து நின்று விடுவது போல, நாமும் சீக்கிரமாகவே வாழ்க்கையில் தலைநிமிர்ந்து விட வேண்டும். உடனே சேமிப்பை ஆரம்பித்து விடவேண்டும்.

எறும்புகள், தமக்கு வேண்டியதை விட அதிகமாகவே சேகரித்து விடுகின்றன. அது போல், நாமும் பணம் சம்பாதிக்கும்போதே சுறுசுறுப்பாகச் சேமிக்க வேண்டும். தாய் கங்காரு, தான் குதிக்கும்போது கூட தனது பையில் உள்ள குட்டியைப் பாதுகாக்கிறது. அதுபோல், நமது சேமிப்பின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். ஓர் அணிலானது, தான் சாப்பிடும் பருப்புகளை மரப்பொந்துகளின் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கிறது. அதுபோல், நமது சேமிப்பை அநேக விதங்களில் சேமிக்க வேண்டும்.

ஒரு கொக்கானது, தண்ணீரில் மணிக்கணக்காக தமது இரைக்காகக் காத்திருப்பது போல், நாமும் சேமித்துவிட்டு நல்ல பயனுள்ள தொகைக்காகக் காத்திருக்க வேண்டும். ஒட்டகச்சிவிங்கியோ தனக்குள் உள்ள நான்கு பைகளில் ஆகாரத்தைச் சேமித்து வைத்து, தனக்குப் பசியெடுக்கும் போது அதிலிருந்து எடுத்துக்கொள்கிறது. அதுபோல், நமக்கு வேண்டுமானபோது கிடைக்கும்படியாக நமது சேமிப்பு இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். நமக்குத் தேவையான போது கிடைக்கும் சேமிப்பே, மிகச் சிறந்த சேமிப்பாகும்.

அட்டவணை:

| மிருகம் | அதன் இயல்பு | அதன் மூலம் நாம் கற்றுக்கொள்வது |
|---|---|---|
| வரிக்குதிரை | அதன் குட்டி ஒரு மணி நேரத்திலேயே தலை நிமிர்ந்து நிற்கும். | உடனே சேமிப்பை ஆரம்பித்து விட வேண்டும். |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(20 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் மக்கள் அனைவரும் தமது பெயர்களைத் தமிழிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாம் இந்த தமிழ்ப் பெயர்க்கையேட்டை வெளியிட்டுள்ளோம். இவ்வாறு தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி கடந்த திங்களன்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற “தமிழ்ப் பெயர்க் கையேடு” நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தமிழர்கள் தமது பெயர்களை தமிழில் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு, 1992 ஆம் ஆண்டு தமிழீழப் பெயர்க் கையேடு ஒன்றை மிகவும் குறைந்த பெயர்களுடன் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டது. அதன் பின் பெருந்தொகையான பெயர்களுடன் நிறைவான நூலை வெளியிட வேண்டும் என நாம் விரும்பினோம். பொதுவாக மேல் நாட்டவரை பொறுத்த வரை அவர்கள் பெயரை வைத்தே அவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியும். ஆனால் தமிழர்களைப் பொறுத்த வரையில் அது முடியாத காரியமாகும். இந்நிலை மாறி ஓரளவாவது தமிழருடைய பெயரை வைத்து இவர் தமிழரா என்பதை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் ஒரு நூலை வெளியிடவேண்டும் என விரும்பினோம். யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் இந்த நூலை எப்படி ஆக்குவது என எண்ணி அதன் தொடக்க முயற்சிகளை மேற்கொண்டோம். பேராசிரியர் சண்முகதாஸ், அவரது துணைவியார், பண்டிதர் பரந்தாமன், இளங்குமரன் ஆகியோர் இணைந்து இந்த முயற்சியை ஆரம்பித்து நூலை ஆக்கி முடித்துள்ளோம். இந்நூல் நாலாயிரம் பெயர்களைக் கொண்டு வெளிவந்துள்ளது. 1992 ஆம் ஆண்டு ஆரம்பித்த எமது முயற்சி 2003 ஆம் ஆண்டு தான் நிறைவேறி உள்ளது. நாங்கள் எங்களுடைய விடுதலைப் போராட்ட பணிக்கிடையே இந்த பணியையும் செய்திருக்கின்றோம். தமிழ் அறிஞர்கள் பலர் முன்வருவார்களானால் இப்படிப்பட்ட பல நூல்களை வெளிவிடலாம். தமிழர்கள் தங்களுடைய பெயரை தமிழில் இட்டு தம்மை அடையாளம் காட்ட அது வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

i. இந்தப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பை இடுக. (1 புள்ளி)

........................................................................................................................................

ii. யார் யார் இந்த நூலை ஆக்குவதற்குத் துணை புரிந்தார்கள்? (3 புள்ளிகள்)

........................................................................................................................................

iii. தமிழ்ப் பெயர்க் கையேடு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

........................................................................................................................................

iv. இந்த நூல் வெளியீட்டு விழா எங்கே நடைபெற்றது? (1 புள்ளி)

........................................................................................................................................

v. ”தமிழர்கள் தமிழிலே தான் பெயரை வைத்துக்கொள்ள வேண்டும்” என்ற கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக. (3 புள்ளிகள்)

........................................................................................................................................

4. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுக. (100 - 150 சொற்கள்)

(20 புள்ளிகள்)

i. தமிழை இரண்டாம் மொழியாக இதுவரை கற்று வந்துள்ளீர். இதனால் உமக்கு ஏற்பட்ட அனுபவங்கள், பலன்கள் பற்றியும் இவ்வறிவும் அனுபவமும் உமது எதிர்கால வாழ்க்கைக்கு எவ்வகையில் பயன்படும் என்பது பற்றியும் கட்டுரை எழுதுக.

ii. மெல்பேனில் வசிக்கும் உமது நண்பன் உயர்தர வகுப்பிற்கு தமிழை ஒரு பாடமாக எடுப்பதா இல்லையா என்று முடிவு எடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார். ஒரு பாடமாக எடுப்பது தான் சரியான முடிவு என்பதை வலியுறுத்தியும், அதனால் ஏற்படும் நன்மைகளை விபரித்தும் ஒரு கடிதம் எழுதுக.

iii. இன்று காலை நான் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஒரு பணப்பையைக் கண்டெடுத்தேன். அதனுள் 10,000 டாலர்கள் இருந்தன. என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக்கொண்டு திரும்பிய போது என்னை நோக்கி ஒருவன் கத்தியுடன் ஓடி வந்து கொண்டிருந்தான். தொடர்ந்து என்ன நடந்தது என்பது பற்றி ஒரு கற்பனைக் கட்டுரை வரைக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

ஆண்டிறுதிப் பரீட்சை ஆண்டு பத்து நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி த.சந்திரதாஸ் திகதி:- 29-11-2008

பெயர்:-

வாசித்து விடையளித்தல்

1. கொடுக்கப்பட்ட உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு பதிலளிக்கவும்.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முதல் முதலாக கிரேக்க தேசத்திலுள்ள ஒலிம்பியா என்னும் இடத்தில் நடைபெற்றது. இதனாலேயே இவ்விளையாட்டுக்கள் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் என்று அழைக்கப்படுகிறது.

ஆதிகால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கி.மு 776 இல் கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் தொடங்கி கி.பி 393 வரை நடைபெற்றன. கிரேக்க கவிஞர் ஒருவர் கி.பி 1833 இல் எழுதிய "இறந்தவர்களின் உரையாடல்" என்னும் கவிதை இப்போட்டிகளை மீண்டும் தொடங்கும் ஆர்வத்தை உருவாக்கியது.

நவீன ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கிரேக்க தேசத்தில் 1896 ஆம் ஆண்டில் அதென்ஸ் (Athens) என்னும் இடத்தில் நடைபெற்றது. பனிக்கால விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொருட்டு 1924 முதல் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன. தொடக்கத்தில் கோடைகால மற்றும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஒரே ஆண்டில் நடத்தப்பட்டு வந்தன. 1994 முதல் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன.



ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் அடையாளமாக விளங்கும் இந்த ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களையும் பிரதினிதிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பயன்படுத்தப்பட்ட நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு என்ற நிறங்கள் பெரும்பாலான உலக நாடுகளின் தேசியக் கொடிகளில் பயன்படுத்தப்பட்ட நிறங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஐந்து ஒலிம்பிக் வளையங்களும் 1913 இல் வடிவமைக்கப்பட்டு 1914 இல் அங்கீகரிக்கப்பட்டு 1920 இல் கோடை ஒலிம்பிக் விளையாட்டுக்களில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டன.

2008 ஆம் ஆண்டு பெய்ஜிங் (Beijing) இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் உண்மையில் தனித்துவம் பெற்று விழங்கின என்றும் விளையாட்டுக்கு இருக்கும் ஒன்றுபடுத்தும் சக்தியை நிரூபித்துக் காட்டும் வகையில் அமைந்திருந்தது என்றும் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் Jacques Rogge கூறினார்.

ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களும் தென்னூறாயிரம் பார்வையாளர்களும் அரங்கில் நிறைந்திருக்க ஒலிம்பிக் கொடியை நான்கு ஆண்டுகளில் அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடத்த இருக்கும் இலண்டன் நகர மேயரிடம் Jacques Rogge கையளித்தார்.

i. தரப்பட்ட உரைப்பகுதியிலிருந்து 5 முக்கியமான தகவல்களைத் தெரிவு செய்து கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| ஆண்டு | நடைபெற்ற நிகழ்வு |
|---|---|
| கி.மு. 776 | ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது |
| | |
| | |
| | |
| | |
| | |

(5 புள்ளிகள்)

ii. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் சின்னமான ஐந்து வளையங்களும் எவற்றைப் பிரதினிதித்துவப் படுத்துகின்றன.

(2 புள்ளிகள்)

iii. சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பெய்சிங் ஒலிம்பிக் பற்றி கூறிய கருத்து யாது?

(3 புள்ளிகள்)

iv. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் எங்கே, எப்போது நடைபெற உள்ளது?

(2 புள்ளிகள்)

v. ஒலிம்பிக் வளையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் எவை? குறிப்பிட்ட நிறங்கள் ஏன் தெரிவுசெய்யப்பட்டன?

(3 புள்ளிகள்)

2. கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்க.

நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மறைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.கைலாசபதியின் பணிகள் போற்றுதற்குரியன. பேராசிரியர் கைலாசபதி ஆக்க இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் என்பன எப்படி வளரவேண்டும் என்பதற்கான நெறிமுறைகளை தமது விமர்சனங்களின் மூலம் வழிகாட்டியவர்.

முதன் முதல் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்டு அதன் தலைவராக பேராசிரியர் கைலாசபதி நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் துரிதமாக வளர்ச்சியடைந்து சிறந்த நிலையை எய்தியதற்கு பேராசிரியர் கைலாசபதியின் உழைப்பும், திறமையுமே காரணம் என்பதை உலகம் அறிந்து கொண்டது. தமிழ் நாவலுக்கு நூறு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது என்பதை தமிழ் இலக்கிய உலகம் அறிவதற்கு பேராசிரியர் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்திய "தமிழ் நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கம்" துணை செய்தது.

பல்கலைக்கழகப் பணியிலாயினும் சரி, பத்திரிகை உலகப் பணியிலாயினும் சரி அவர் சார்ந்து நின்ற இலக்கிய இயக்கப் பணியிலாயினும் சரி தான் மட்டும் வளர்ச்சி பெறுவதில் குறியாக நிற்காமல் தன்னைச் சூழ இருப்பவர்களையும் வளர்த்தெடுப்பதில் அக்கறை காட்டியவர் கைலாசபதி.

அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் இன்று ஆக்க இலக்கியக்காரர்களாகவும் விமர்சகர்களாகவும் விளங்குகின்றனர்.

நெறிப்படுத்தப்பட்ட இலக்கிய விமர்சனத்திற்கு வித்திட்ட பேராசிரியர் கைலாசபதியின் இலக்கியப் பணிகளுக்கச் சான்று பகர்வனவாக அவரது "பாரதி இயல் ஆய்வுகள்", "அடியும் முடியும்", "இரு மகா கவிகள்", "இலக்கியச் சிந்தனை", "இலக்கியமும் திறனாய்வும்", "தமிழ் நாவல் இலக்கியம்" முதலிய நூல்கள் அமைகின்றன.

i. நவீன தமிழ் இலக்கிய வளர்சிசிக்குப் பேராசிரியர் கைலாசபதியின் பங்களிப்பு எவ்வகையில் உதவியது?

(3 புள்ளிகள்)

ii. ஆக்க இலக்கியங்கள் எனப்படுபவை யாவை?

(3 புள்ளிகள்)

iii. தமிழ் நாவலுக்கு நூறு ஆண்டுகள் பூர்த்தியானதை அறியத் துணை செய்தது எது?

(1 புள்ளி)

iv. பேராசிரியர் கைலாசபதி எழுதிய நூல்கள் 4 எழுதுக.

(4 புள்ளிகள்)

v. பேராசிரியர் கைலாசபதி பற்றி இவ்வுரைப்பகுதியிலிருந்து நீர் அறிந்த 4 விடயங்களைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

3. கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்க

அனைவருக்கும் வணக்கம். நான் இப்போது உங்கள் முன் ஊடகங்களில் வானொலியே முதன்மையானது என்ற தலைப்பில் பேச வந்துள்ளேன்.

நவீன உலகில் ஊடகங்கள் எனப்படும் பொதுசாதனத் தொடர்புசாதனங்களின் பங்கு அளப்பரியதாகும். வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, சஞ்சிகைகள் என ஊடகங்கள் பலவகைப்படும். இதில் வானொலி முக்கியமானது என்பது அபிவிருத்தியடைந்த நாடுகளின் மக்களாற்கூட ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வானொலிக்கும் தொலைக்காட்சிக்குமிடையே பாரிய வேறுபாடுகள் உண்டு.

வானொலியின் நிகழ்ச்சித்தயாரிப்பில் குறைந்த தொழில் நுட்ப ஈடுபாடும், தயாரிப்புச் செலவினக்குறைவும், அதிவேகமாகவும், அதிநேர்த்தியாகவும் அதிக நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்ப ஏதுவாக அமைகிறது.

தொலைக்காட்சியின் தயாரிப்பு நுட்பம், மனிதப்பங்களிப்பு, செலவீனம் ஆகியன அதிகரிப்பதோடு பார்வையை ஏமாற்ற முடியாமையும் நிகழ்ச்சித்தயாரிப்பில் அதிகூடிய கவனம் செலுத்தவேண்டி நேரத்தையும், செலவினத்தையும் கூட்டிவிடுகின்றது.

வானொலி காற்றுப்புகக் கூடிய எந்த மூலை முடுக்குகளையும் இலகுவில் எட்டிவிடும். கையும் கண்ணும் வேறு காரியம் செய்யும்போது கூட செவி வானொலியுடன் ஒன்றிவிடக்கூடும். ஆனால் தொலைக்காட்சி ஓரிடத்தில் இருந்து கண்ணுக்கும் காதுக்கும் சேர்த்து விருந்து படைக்கவெனப் படைக்கப்பட்ட ஒரு சாதனம்.

ஆகவே இலகு, எளிமை, சிக்கனம் வானொலியை வானுயர உயர்த்தியுள்ளது என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

i. மேலே தரப்பட்ட உரையின் அடிப்படையில் புலம்பெயர் நாடுகளில் தமிழ் ஊடகங்கள் ஆற்றி வரும் பணியினை சுருக்கமாக எழுதுக.

________________________________________

(5 புள்ளிகள்)

ii. வானொலிக்கும் தொலைக்காட்சிக்கம் இடையிலான வேறுபாடு யாது?

(5 புள்ளிகள்)

4. கீழ்வரும் வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 200 – 250 சொற்களுக்கு குறையாமல் விடையளிக்கவும்.

i. "மாறிவரும் உலகில் தமிழர்களின் பண்பாடு" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

ii. நடைபெற்று முடிந்த 2008 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளில் ஏதாவது ஒன்றில் நீர் பங்குபற்றி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளீர். நீர் நாடு திரும்பும்போது உமக்கு ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் நீர் ஆற்றவிருக்கும் உரையை எழுதுக.

iii. வெளியூரில் இருக்கும் உமது பேனா நண்பருக்கு உமது பாடசாலை வாழ்க்கை முறை, அது தவிர்ந்த வெளி வாழ்க்கை முறை என்பவை பற்றி ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)